K

# முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2018

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் | | | | | | |

நேரம்: 1.15 மணி

## வரலாறு

மதிப்பெண்கள்: 45

### பிரிவு - I

**I.** அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: **10×1=10**

1) வரலாற்றின் பழமையான காலம் ............. ஆகும்.
   அ) பழங்கற்காலம் ஆ) புதிய கற்காலம்
   இ) செம்புக்காலம் ஈ) இரும்புக்காலம்

2) பழங்கற்காலக் கருவிகள் முதன் முதலில் ............. இல் அடையாளம் காணப்பட்டன.
   அ) 1860 ஆ) 1863 இ) 1873 ஈ) 1883

3) மெஹர்கார் ............. பண்பாட்டுடன் தொடர்புடையது.
   அ) பழைய கற்காலம் ஆ) புதிய கற்காலம்
   இ) இடைக்கற்காலம் ஈ) செம்புக்காலம்

4) தொடக்க ஹரப்பா காலகட்டம் என்பது ............. ஆகும்.
   அ) பொ.ஆ.மு. 3000 - 2600 ஆ) பொ.ஆ.மு. 2600 - 1900
   இ) பொ.ஆ.மு. 1900 - 1700 ஈ) பொ.ஆ.மு. 1700 - 1500

5) ஹரப்பா மக்களுக்கு முக்கியமான வாழ்வாதார வழிமுறையாக ............. இருந்தது.
   அ) வேளாண்மை ஆ) மட்பாண்டம் செய்தல்
   இ) கைவினைத் தொழில்கள் ஈ) மீன்பிடித்தல்

6) ஆதிச்சநல்லூர் ............. மாவட்டத்தில் அமைந்துள்ளது.
   அ) கோயம்புத்தூர் ஆ) திருநெல்வேலி
   இ) தூத்துக்குடி ஈ) வேலூர்

7) கீழ்காணும் இணைகளை கவனிக்கவும்.
   அ) சேனானி - படைத்தளபதி
   ஆ) கிராமணி - கிராமத்தலைவர்
   இ) பாலி - தன்னார்வத்தால் கொடுக்கப்பட்டது
   ஈ) புரோகிதர் - ஆளுநர்
   மேற்கண்டவற்றில் எந்த இணை தவறானது?
   அ) (i) ஆ) (ii) இ) (iii) ஈ) (iv)

8) கூற்று : முற்கால வேதகாலத்தில் குழந்தை திருமணம் இருந்ததற்கான சான்றுகள் இல்லை.
   காரணம் : பின் வேதகாலத்தில் பெண்கள் சடங்குகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர்.
   அ) கூற்றும் காரணமும் சரியானவை, காரணம் கூற்றை விளக்குகிறது.
   ஆ) கூற்றும் காரணமும் சரியானவை, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
   இ) கூற்று சரியானது காரணம் தவறானது.
   ஈ) கூற்று காரணம் இரண்டும் சரியான்வை.

9) புத்தர் தனது முதல் போதனையை ............. இல் நிகழ்த்தினார்.
அ) சாஞ்சி ஆ) வாரணாசி இ) சாரநாத் ஈ) லும்பினி

10) ............ வேளாண்மை முறையை மேம்படுத்தியதில் முக்கிய பங்காற்றியது.
அ) இரும்பு ஆ) வெண்கலம் இ) செம்பு ஈ) பித்தளை

## பிரிவு - II

**II.** ஏதேனும் 4 வினாவிற்கு விடையளிக்கவும்: **4×2=8**

**வினா எண் 16க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.**

11) பழங்கற்காலம் எவ்வாறு பிரிக்கப்படுகிறது?
12) ஹோமினின் குறித்து சிறுகுறிப்பு வரைக.
13) வேதகால இலக்கியங்களை வரிசைப்படுத்தவும்.
14) தொடக்க வேதகாலத்தில் பெண்கள் நிலையை கோடிட்டு காட்டுக.
15) நமது ஆய்வுக்கு சான்றாக உள்ள திரிபீடகங்களை எழுதுக.
16) மகாவீரருடைய போதனைகளின் மையக்கருத்து என்ன?

## பிரிவு - III

**III.** ஏதேனும் 4 வினாக்களுக்கு விடையளி: **4×3=12**

**வினா எண் 21க்கு கண்டிப்பாக விடை தருக.**

17) இந்திய இடைப் பழங்காலத்தின் முக்கிய கூறுகளை எழுதுக.
18) இடைக்கற்கால பண்பாடுகளின் குறிப்பிடத்தக்க பண்புகள் யாவை?
19) மேய்ச்சல் சமூகத்தின் இயல்புகளை ஆய்க.
20) தொடக்க வேதகால சமூகத்திற்கும்'பின்வேதகால சமூகத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை காட்டுக.
21) காட்டை திருத்தியதில் இரும்பின் பங்களிப்பு குறித்து மதிப்பிடுக.
22) தமிழ்நாட்டில் சமணம் செலுத்திய செல்வாக்கை குறிப்பிடுக.

## பிரிவு - IV

**IV.** அனைத்து வினாக்களுக்கும் விடையளி: **3×5=15**

23) கீழ் மற்றும் இடைப்பழங்கால பண்பாடுகளை ஒப்பிடுக.

**(அல்லது)**

சிந்து நாகரிகம் ஏன் ஹரப்பா நாகரிகம் என அழைக்கப்படுகிறது?

24) தமிழ்நாட்டின் பெருங்கற்கால அகழ்வாய்விடங்கள் பற்றி விவரிக்க.

**(அல்லது)**

வேதகால அரசியல் மற்றும் நிர்வாகம் குறித்து ஒரு கட்டுரை வரைக.

25) பொது. ஆ.மு. ஆறாம் நூற்றாண்டில் ஏற்பட்ட அறிவு மலர்ச்சிக்கான காரணங்கள் யாவை?

**(அல்லது)**

புத்தரின் எண் வழிப்பாதையை விவரி.

---------